தமிழ்நாடு சட்டப் பேரவை.

சனிக்கிழமை, 1973 நவம்பர் 24.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **புலவர் கா. கோவிந்தன்** அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்-விடைகள்.

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

கல்கத்தாவிலுள்ள அறிஞர் அண்ணா தமிழ் சங்கத்திற்கு உதவி

*559 வினா—**திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு கல்வி-சுற்றுலாத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கல்கத்தா அறிஞர் அண்ணா தமிழ் சங்கத்திடமிருந்து நமது மாநில அரசுக்கு நிதியுதவி கோரி ஏதேனும் விண்ணப்பம் வந்துள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: ஆம். இது ஆய்விலுள்ளது.

திரு. சு. துரைசாமி: தலைவர் அவர்களே, கல்கத்தா அறிஞர் அண்ணா தமிழ்ச் சங்கத்தார் எவ்வளவு நிதி கேட்டார்கள்? அவர்களுடைய கோரிக்கை ஆய்விலுள்ளதாக அமைச்சரவர்கள் குறிப்பிட்டார்கள். அவர்கள் கேட்ட தொகையினைப் பூராவாகக் கொடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, அவர்கள் தங்களுடைய பள்ளிக்கூடம் கட்டுவதற்கு ஒரு இலட்ச ரூபாய் மானியம் வேண்டுமென்று கேட்டார்கள்.

ஆனால், அதுபற்றிய முழு விவரக்குறிப்பு நமக்குக் கிடைக்காத காரணத்தால், மேற்கு வங்கப் பள்ளிக் கல்வி இயக்குநரிடத்திலிருந்து அதுபற்றி விவரங்கள் கேட்கப்பட்டன. அவர்களிடமிருந்து விவரங்கள் வராத காரணத்தால் மேற்கு வங்க அரசிடமிருந்து விவரங்கள் கேட்டிருக்கிறோம். இப்பள்ளி மேற்கு வங்க அரசினால் அங்கீகாரம் பெற்றதா? மேற்கு வங்க அரசிடமிருந்து ஏதாவது மானியம் பெறுகிறதா? அப்பள்ளியின் பாடபோதனைத் திட்டம் அங்கீகரிக்கப்பட்ட ஒன்றா? பள்ளி நிர்வாகத்தின் நிதி நிலைமை திருப்திகரமானதா? இப்பள்ளி அவ்வட்டாரத்தில் உள்ள தமிழ் சிறுபான்மை வகுப்பினரின் கல்வித் தேவைகளைப் பூர்த்தி செய்கிறதா? இந்தக் கேள்விகளுக்கான விளக்கங்களைப் பெற்றதற்குப் பிறகு அரசு தக்க முடிவு எடுக்கும்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவர் அவர்களே, இந்த விண்ணப்பம் எந்தத் தேதியில் வந்தது? இதுபோன்ற இதர தமிழ்ச் சங்கங்கள் நிதி கேட்டால் கொடுக்க அரசு ஆலோசனை செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, பொதுவாகச் சொல்வதற்கில்லை. அவரவர்கள் விண்ணப்பத்தை அடிப்படையாக வைத்து அதிலுள்ள நியாயத்தினுடைய தன்மைகளைப் பொறுத்துத்தான் நாம் அளித்து வருகிறோம். ஆனால், அந்த முழு விவரத்தை அறிந்துகொள்ளாமல் இந்தப் பள்ளிக்கூடத்தைப் பொறுத்தவரையில் நாம் தருவதற்கில்லை. ஆகவேதான், விவரம் கேட்டிருக்கிறோம்.

THIRU K. S. KOTHANDARAMIAH: Sir, wherever there may be such institutions, they should be helped because the ultimate idea of Government is to preserve the culture and education of any linguistic group. In this respect I thank the Hon. Minister for saying that this is under consideration of Government Similarly there are certain other cultural associations in our State, belonging to other linguistic minorities. Will the Hon. Minister consider their cases also?

1973 நவம்பர் 24]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, அந்தந்த மாநில அரசுகளே அங்கங்கே இருக்கும் சிறு சிறுபான்மையோருக்குப் பெரும்பான்மையான உதவிகளை அளித்து வருகின்றார்கள். ஆனல், தொடர்புடைய மொழியைக் கொண்ட மாநிலமும் உதவி அளிக்க வேண்டுமென்பதுதான் இந்தக் கோரிக்கை. ஆகவே, அந்த மாநிலத்தைப் பொறுத்த வரையில் என்ன என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதைப் பொறுத்துத்தான் நாம் மேற்கொண்டு முடிவு எடுக்க முடியும்.

கல்லூரி ஆசிரியர்களுக்குப் பயிற்சி

*** 360 வின—திரு. சு. துரைசாமி:** மாண்புமிகு கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடை யளிப்பாரா—

கல்லூரி ஆசிரியர்களுக்கும், ஆசிரியர் பயிற்சி கொடுக்கும் திட்டம் அரசு பரிசிலனையிலுள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இல்லை.

திரு. சு. துரைசாமி: தலைவர் அவர்களே, கல்லூரியில் பயிற்சி அளிக்க நியமிக்கப்படும் ஆசிரியர்கள் எம்.ஏ., எம்.எஸ்ஸி. தேர்வு முடிந்தவுடனே வந்துவிடுகிறார்கள். அவர்களுக்குப் போதிய அனுபவம் இல்லாததால் மாணவர்களுக்குச் சரியான முறையில் கல்வி கற்றுக்கொடுப்பது சிரமமாக இருக்கிறது. ஆகவே, அவர் களுக்குக் குறைந்தது ஓராண்டாவது பயிற்சி அளிக்கும் திட்டத்தை அரசாங்கம் கொண்டுவர முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, அப்படிப்பட்டவொரு திட்டம் இல்லை என்று குறிப்பிட்டேன். ஆனல், அப்படிப்பட்டவொரு திட்டத்தை மேற்கொள்ளவேண்டுமென்று கல்லூரிக் கல்வி இயக்குநர் அவர்கள் ஒரு செயற்குறிப்பினை அரசுக்கு அனுப்பிவைத்திருக்கிறார்கள். அரசு அதுபற்றி பரிசிலனை செய்யவேண்டியிருக்கிறது. அந்தக் கருத்தை ஓரளவு ஏற்றுக் கொள்ளவேண்டும் என்று கருத்துகூட தெரிவித்திருக்கிறேன். ஆனல், அதற்கான செலவு வகைகளைப் பார்த்தால் ஒரு எட்டு லட்சம் சில்லறை ரூபாய் ஆகிறது. ஆகவே